தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண் 251/பேரூ/2022
நாள் 09.03.2023

திரு.S.திருமூர்த்தி,
காரமடை,
கோயம்புத்தூர் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்.

செயல் அலுவலர்,
பெரியநாயக்கன் பாளையம் பேரூராட்சி,
கோயம்புத்தூர் மாவட்டம். – எதிர் மனுதாரர்

கோயம்புத்தூர் மாவட்டம், காரமடை, காமராஜ் சாலை, கதவு எண்.11/1 என்ற முகவரியில் வசிக்கும் திரு.S.திருமூர்த்தி என்பவரின் 10.12.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 12.12.2022 அன்று பெறப்பட்டு 251/பேரூ/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

கோயம்புத்தூர் மாவட்டம், காரமடை, காமராஜ் சாலை, கதவு எண்.11/1 என்ற முகவரியில் வசிக்கும் திரு.S.திருமூர்த்தி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

"பெரியநாயக்கன்பாளையம் ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வார்டு 18–ல் சர்வே எண். 381 பத்து மனைப்பிரிவுகளில் இரண்டு மனைப்பிரிவுகள் விவசாய நிலம் என்று பத்திரப்பதிவு செய்யப்பட்டுள்ளன. அதில் ஒரு மனைப்பிரிவில் கமர்சியல் கட்டடம் கட்டப்பட்டுள்ளது. மீதம் 8 மனைப்பிரிவுகளில் அனுமதியற்ற மனைப்பிரிவில் முறைகேடாக வரன்முறைப்படுத்தியுள்ளார்கள் என புகார் மனு தெரிவித்தேன். இந்நாள்வரை பேரூராட்சியின் செயல் அலுவலர், பேரூராட்சியின் உதவி இயக்குநர் ஆகிய இருவரும் எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. கடமை தவறிய இவர்கள் மீது தாங்கள் உரிய விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

(2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 14.12.2022 நாளிட்ட கடிதம் மூலம் பெரியநாயக்கன் பாளையம் பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலர் தனது 10.01.2023 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:–

"கோயம்புத்தூர் மாவட்டம், பெரியநாயக்கன் பாளையம் பேரூராட்சிக்குட்பட்ட சர்வே எண். 381, 391, 393, 393/2, 391/2 பகுதியில் திரு.திராவிடமணி என்பவர் பெயரில் 5 மனையிடங்களுக்கும் மற்றும் திரு.சுரேஷ்குமார் என்பவரின் பெயரில் 2 மனையிடங்களுக்கும், மனையிடம் அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவின் கீழ் 27.09.2018 மற்றும் 24.10.2018 நாளிட்ட பேரூராட்சி அலுவலக செயல்முறை ஆணையின்படி, மனையிடம் அங்கீகாரம் அப்போதைய செயல் அலுவலரால் வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் திரு.திருமூர்த்தி, காரமடை என்பவரது புகார் மனுவின் அடிப்படையில் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் மனையிடம் அனுமதி வழங்கப்பட்ட, மனையிடத்தின் உரிய ஆவணங்களை சமர்ப்பிக்க கேட்டு பேரூராட்சி அலுவலக கடிதக்குறிப்பு ந.க.எண்.197/2018/அ–நாள்: 08.08.2022–ன்படி கடிதக்குறிப்பு பதிவஞ்சல் மூலம் அனுப்பி ஒப்புதல் மட்டும் பெறப்பட்டு நாளது வரை உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்காததைத் தொடர்ந்து 7 தினங்களுக்குள் உரிய ஆவணங்களை சமர்ப்பிக்க தெரிவித்து இறுதி கடிதக்குறிப்பு அனுப்பப்பட்டது. மேலும் 09.01.2023–ம் தேதி வரை ஆவணங்கள் ஏதும் சமர்ப்பிக்காததால் 24.10.2018 நாளிட்ட இவ்வலுவலக செயல்முறை ஆணையில் வழங்கப்பட்ட அனுமதி உத்திரவினை முன்தேதியிட்டு இரத்து செய்து உத்திரவிடப்பட்டுள்ளது. மேலும் மனையிடம் அனுமதி வழங்கிய கோப்புகளின் உண்மை நகல் கையொப்பமிட்டு இத்துடன் இணைத்து அனுப்பிவைக்கப்படுகிறது என்பதை பணிவுடன் தெரிவித்து கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

(3) மனுதாரரும் மற்றும் எதிர்மனுதாரரான பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலரும், 20.02.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 16.02.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) மனுதாரர் திரு.S.திருமூர்த்தி என்பவர் தனது உடல்நலம் சரியில்லாத காரணத்தினால் விசாரணைக்கு வர இயலவில்லை என மின்னஞ்சல் மூலம் இம்முறைமன்ற நடுவத்திற்கு தகவல் தெரிவித்ததைத் தொடர்ந்து, புகாரினை குறித்து இம்முறைமன்ற நடுவ செயலாளரால் மனுதாரரிடம் அலைபேசி மூலம் விசாரிக்கப்பட்டதில் மனுதாரர் தனது 10.12.2022 நாளிட்ட மனுவில் தெரிவித்துள்ள புகாரினையே வலியுறுத்தியுள்ளார்.

(5) எதிர்மனுதாரான பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலர் 20.02.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சியில் சர்வே எண்.381,391,393,393/2,391/2–ல் திரு. திராவிடமணி என்பவருக்கு 5 மனையிடங்களுக்கு 27.09.2018லும் திரு. சுரேஷ்குமார் என்பவருக்கு இரண்டு மனையிடங்களுக்கு 24.10.2018லும் என ஆகமொத்தம் 7 மனையிடங்களுக்கு பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சியின் அப்போதைய செயல் அலுவலரால் மனைப்பிரிவை முறைப்படுத்தி அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட மனைப்பிரிவிற்கு முறைப்படுத்தி அங்கீகாரம் வழங்கப்பட்டதினால் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறையின் அரசாணை எண்.78, நாள்04.05.2017, மற்றும் அரசாணை எண்.172, நாள்13.10.2017 மற்றும் கோவை, நகர் ஊரமைப்பு துணை இயக்குநரின் 17.04.2018 –ம் நாளிட்ட ஆணைகளின்படி, 20.10.2016க்கு பின்பு பிரிக்கப்பட்ட அனுமதியற்ற மனைப் பிரிவுகளை வரன்முறைப்படுத்த வழிவகை இல்லாத காரணத்தினால், பெரியநாயக்கன் பாளையம் பேரூராட்சி செயல் அலுவலரின் 06.01.2023 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி மேற்கண்ட மனைப்பிரிவுகளுக்கு வழங்கப்பட்ட அனுமதி உத்தரவு முன்தேதியிட்டு இரத்து செய்து ஆணையிடப்பட்டது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

(6) 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டப்பிரிவு 2 (a) (v)–ன்படி குற்றச்சாட்டு என்பது பொதுப் பணியாளர்களில் அவர் எந்த வகையைச் சேர்ந்தவராக இருக்கின்றாரோ அதற்கேற்ப அவரால் தானாக கடைப்பிடிக்கப்பட வேண்டியதான நேர்மையான விதிமுறைகள் மற்றும் நன்னடத்தைக்கு இணங்கிய வகையில் செயற்படுவதற்கு தவறியிருக்கிறார் என்று உறுதி செய்யப்பட்டிருப்பது எதுவும் என்று பொருள்படும் என இம்முறைமன்ற நடுவர் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை, வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

கோயம்புத்தூர் மாவட்டம், காரமடையைச் சார்ந்த மனுதாரர் திரு.S.திருமூர்த்தி என்பவர் தனது 10.12.2022 நாளிட்ட முறையீட்டு மனுவில் பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சிக்குட்பட்ட வார்டு 18, சர்வே எண்.381–ல் அனுமதியற்ற குடியிருப்பு மனையிடங்களை முறைகேடாக பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சியால் வரன்முறைப்படுத்தப்பட்டுள்ளது எனப் புகார் தெரிவித்துள்ளார்.

கோயம்புத்தூர் மாவட்டம், பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சி, பெரியநாயக்கன்பாளையம் கிராமம், சர்வே எண்.393 (2) கொண்ட பகுதியில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைகளான மனை எண். 1, 2, 3, 4 மற்றும் 5 ஆகிய மனையிடங்களை 27.09.2018 நாளிட்ட பெரியநாயக்கன்பாளையம் செயல் அலுவலரின் செயல்முறைகள் மூலம் வரன்முறைப்படுத்தப்பட்டு திரு.V.திராவிடமணி என்பவருக்கு ஆணை வழங்கப்பட்டுள்ளது. அதேபோல் பெரியநாயக்கன்பாளையம் கிராமத்தில் அமைந்துள்ள சர்வே எண். 391 கொண்ட பகுதியில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனை எண்கள் 6 மற்றும் 7 ஆகியவற்றிக்கும் பேரூராட்சியின் செயல் அலுவலரால் 24.10.2018 நாளிட்ட செயல்முறைகள் மூலம் வரன்முறைப்படுத்தப்பட்டு திரு.சுரேஷ்குமார் என்பவருக்கும் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

அனுமதியற்ற மனைப்பிரிவு (Layout) மற்றும் மனைகளை (Plots) முறையாக வரன்படுத்துவது தொடர்பாக வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறையால் அரசாணை (நிலை) எண்.78, நாள் 04.05.2017 மற்றும் அரசாணை (நிலை) எண்.172, நாள் 13.10.2017 ஆகியவற்றில் முறையே அறிவிக்கை ஆணை மற்றும் திருத்த ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது. மேற்காணும் அரசாணைகளில் 20.10.2016 தேதிக்கு முன்பு பிரிக்கப்பட்ட அனுமதியற்ற மனைப்பிரிவுகளை மட்டும் உரிய ஆவணங்களின் அடிப்படையில் முறைப்படுத்த உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும் தவறான ஆவணங்கள் சமர்ப்பித்து அனுமதி பெறும் பட்சத்தில் வழங்கப்பட்ட அனுமதியை இரத்து செய்யவும் அனுமதி வழங்கி ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

இந்நிலையில், மேற்காணும் 7 அனுமதியற்ற குடியிருப்பு மனைகள் அப்போதைய பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலரால் முறைகேடாக 27.09.2018 மற்றும் 24.10.2018 நாளிட்ட செயல்முறைகள் மூலம் திருவாளர்கள் V.திராவிடமணி மற்றும் சுரேஷ்குமார் என்பவர்களுக்கு விதிகளை மீறி வரன்முறைப்படுத்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது என பேரூராட்சியில் வரப்பெற்ற புகாரினை தொடர்ந்து மேற்படி திரு.V.திராவிடமணி மற்றும் திரு.சுரேஷ்குமார் என்பவர்களின் பெயரிலுள்ள மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்டதற்கான ஆவணங்களை பேரூராட்சியில் சமர்ப்பிக்குமாறு 08.08.2022 மற்றும் 02.01.2023 நாளிட்ட கடிதக்குறிப்பு மூலம் கேட்டுக் கொள்ளப்பட்டும், எவ்வித ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாத நிலையில், மேற்காணும் நபர்களின் பெயரிலுள்ள மனைகளை வரன்முறைப்படுத்தி வெளியிட்ட ஆணையினை பேரூராட்சியின் செயல் அலுவலரால் 06.01.2023 நாளிட்ட செயல்முறை ஆணைகள் மூலம் முன்தேதியிட்டு இரத்து செய்து ஆணையிடப்பட்டுள்ளதை ஆவணங்களின் மூலம் அறிய முடிகிறது.

மேற்கண்டவாறு 27.09.2018 மற்றும் 24.10.2018 நாளிடப்பட்ட செயல்முறைகள் மூலம் அப்போதைய பேரூராட்சியின் செயல் அலுவலரால் அனுமதியற்ற மனையிடங்களை முறைகேடாக வரன்முறைப்படுத்தி வெளியிடப்பட்ட ஆணைகள் 06.01.2023 நாளிட்ட செயல்முறைகள் வாயிலாக இரத்து செய்திருப்பதன் மூலம், அப்போதைய பேரூராட்சி செயல் அலுவலரான திரு.அர.பார்த்திபன் என்பவர் அனுமதியற்ற மனைகளை வரன்முறைப்படுத்துவது தொடர்பாக வெளியிடப்பட்ட அரசாணையில் தெரிவிக்கப்பட்ட 20.10.2016 ஆம் தேதிக்கு பின்னர் பிரிக்கப்பட்ட அனுமதியற்ற மனைப்பிரிவுகளை வரன்முறைப்படுத்த முடியாது என்பதை கருத்தில் கொள்ளாமல் முறைகேடாக மனையிடங்களை வரன்முறைப்படுத்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளதை தெள்ளத் தெளிவாக ஆவணங்களின் மூலம் அறியமுடிகிறது. இவ்வாறு, அரசாணையில் வெளியிடப்பட்ட ஆணையினை பின்பற்றாமல் பொறுப்பற்ற முறையிலும் அலட்சியத்துடனும் பேரூராட்சிப் பணியில் கடமை தவறி செயல்பட்ட அப்போதைய பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலர் திரு.அர.பார்த்திபன் என்பவர் மீதும் மற்றும் சம்பந்தப்பட்ட பேரூராட்சி அலுவலர்கள் மீதும் உரிய விதிகளின் கீழ் கடும் ஒழுங்கு நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு பேரூராட்சிகளின் இயக்குநருக்கு பரிந்துரை செய்ய இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

The Director of Town Panchayats is directed to take severe disciplinary action against the Executive Officer concerned besides sending a detailed circular to all Executive Officers in the State to desist from issuing such plan approvals in violation of the Government Orders issued in 2017 in G.O.No.78, Hg & UD Department, dated 04.05.2017. Wherever approvals were given by the Executive Officers in violation of the Government Order necessary remedial action has to be initiated. The Assistant Directors of Town Panchayats should be instructed to review the status in their respective Districts and report compliance to the Director of Town Panchayats within 45 days.

2023 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 09–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.S.திருமூர்த்தி,
11/1, காமராஜ் ரோடு,
காரமடை – 641104,
கோயம்புத்தூர் மாவட்டம்.

2) செயல் அலுவலர்,
பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சி,
பெரியநாயக்கன்பாளையம் – 641 020.
கோயம்புத்தூர் மாவட்டம்.

3) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை, ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி. நகர், சென்னை–28.

4) இணை இயக்குநர் (பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை, ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி. நகர், சென்னை – 28. (பெயரிடப்பட்ட உறையில்)

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

09/03/23
செயலாளர்
9.3.23